முருகப்பெருமான் துணை
முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 778**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

15.11.2021, திங்கட்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்கார சக்தியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் பிலவ துலை திங்களில்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 29ம் நாள், 15.11.2021 திங்கட்கிழமை)
அருளுவேன் அரங்கன் சக்திபலமும் கூடவே
வாசிவென்ற தலைவர் பெருமக்களெல்லாம்
வல்லமைபட ஞானிகளாக அரங்கனுள் உடனிருக்க
3. ஆசிதந்து ஞானவான்கள் படை அரங்கனை கொண்டே
ஆறுமுகன் உருவாக்க இருக்க
இருக்கவே இந்த அற்புதத்தை
ஏழாம்படைவீட்டிலிருந்து ஆறுமுகன் யான் நடத்துவேன்
4. நடத்திட அரங்கனை ஏற்று சரணடைந்த
நாட்டிடுவேன் உலகமக்கள் அனைத்துபேருக்கும்
தடையற ஞானசித்தி உறுதி
தவபூர்த்தி பிறவாத பெரும்பேறும் உறுதியாகும்
5. ஆகவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
அரங்கன் தர்மமே கலியின் சிறந்த மார்க்கம்
யுகமக்கள் ஒன்றிணைந்து ஓங்காரக்குடில் நோக்கி
உடன்வந்து அரங்கன் வழிவழியே
6. வழிமொழிந்து உலகோர் தொடர்ந்து வர
வணங்கி திருவடி தீட்சை பற்றி
அழியாமை தாரீர் என வேண்டி
அரங்கன் தர்மத்தை செய்துவர
7. வருகவே உலகம் நல்லுலகமாகும்
வருகின்ற காலம் ஞானஆட்சியாக மலரும்
தருகின்ற அரங்கன் குணத்தால்
தரணியோரெல்லாம் தன்னார்வ தொண்டு மிக்கவர்களாகி

8. ஆகியே உலகத்தில் ஞானவான்கள் என்கின்ற
அற்புதமான படைகள் உலகமெங்கும் பரவி
அகிலமெங்கும் அரங்கன் தயவுகொண்ட
அன்பர்களும் ஞானவான்களும் ஒன்றிணைந்து இனிதே

9. இனிதே உலகமாற்றம் நடத்தக்கூடும்
ஏழாம்படைவீட்டிலிருந்து ஆறுமுகன் யான்
களங்கமற இந்த அற்புதத்தை செய்து
கலியுகத்தையே காத்து ஞானயுகமாக்குவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–